திட்டம். இது மாநிலத்தில் ஒரு பொதுத் துறை நிறுவனமாக இருக்கின்ற காரணத்தாலே, இந்தப் பொதுத் துறை நிறுவனங்களை ஒவ்வொன்றாக எடுக்கின்றபோது மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடும் என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி, இன்னும் என்னென்ன ஷரத்துகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் சேர்த்து ஒரு மனுவாக, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்சரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஒன்றாகச் சேர்ந்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறையின் மத்திய அமைச்சர் அவர்களையும் சந்தித்து அழுத்தத்தைக் கொடுப்போம். அதுமட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நாம் இந்தப் பிரச்சினையை எழுப்பி, இதைத் தடுத்து நிறுத்துவதற்குண்டான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு எங்களுடைய அரசு முழு ஒத்துழைப்புக் கொடுக்கும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முழு ஒத்துழைப்பு நல்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்ன சேலம் உருக்காலைக்கு எந்தவிதமான பாதிப்பும் வராமல் தொடர்ந்து, தனியாருக்குச் செல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்கு காங்கிரஸ் கட்சியினுடைய முழு ஆதரவு உண்டு என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு குஜராத்திலிருந்து துளை போடுவதற்கு இயந்திரம் வந்திருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் குஜராத் மாநிலத்திலிருந்து மிகப் பெரிய இயந்திரம் ஒன்று துளை போடுவதற்காக வந்திருக்கிறது. இது மத்திய அரசுக்கு சொந்தமான*

இயந்திரம். இதுகுறித்து என்ன என்று நாங்கள் விசாரிக்கும்போது, தஞ்சை ஜில்லாவிலே ஹைட்ரோ கார்பன் எடுப்பதுபோன்று சிவகங்கை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் எடுப்பதற்காக இந்த இயந்திரம் இங்கே வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போதும் காரைக்குடியிலே கல்லூரிக்கு அருகிலே அந்த இயந்திரம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்ததா? வந்திருந்தால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்களா? இல்லையென்றால் அந்தப் பகுதி மக்கள் மிக மிக வருத்தப்படுகிறார்கள், அவர்கள் அதைத் தடுப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சை ஜில்லாவிலே விவசாயம் கெட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மிகப் பெரிய வறட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதும் தெரியும். ஆனால், இந்த நிலையிலே இங்கே ஓர் இயந்திரத்தைக் கொண்டு வந்து இன்னும் பல ஆயிரம் அடிகள் உள்ளே சென்று அதிலே என்ன இருக்கிறது என்று பார்த்து, இந்தப் பகுதி மக்களையும் கெடுப்போமென்று மத்திய அரசு எண்ணினால், அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கக் கூடாது, இருப்பீர்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, இதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பீர்களா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12–00

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே தெளிவாக பதில் சொல்லப்பட்டுவிட்டது. இந்த அரசினுடைய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய, தமிழக அரசினுடைய நிலைப்பாடு என்ன என்பது தெளிவாகச் சொல்லப்பட்டு விட்டது. தமிழகத்திலே எந்த நிலையிலும், எந்தச் சூழ்நிலையிலும், எக்காரணத்தைக் கொண்டும் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கு அரசு அனுமதி, இசைவு அளிக்காது, ஆய்வு செய்வதற்கும் அனுமதி அளிக்காது, (மேசையைத் தட்டும் ஒலி) உற்பத்தி செய்வதற்கும் அனுமதி அளிக்காது என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லிவிட்டோம்.

2019 ஜூலை 5] [திரு. சி.வி. சண்முகம்]

ஆகவே, இப்போது சிவகங்கை மாவட்டத்திலே, காரைக்குடி பகுதியிலே, ஏதோ ஓர் ஆழ்துளை இயந்திரம் வந்திருப்பதாகவும், ஹைட்ரோ கார்பன் எடுக்கப்பட இருப்பதாகவும் உறுப்பினர் சொல்கிறார்கள். நான் அன்றைக்கே சொல்லிவிட்டேன். அரசு தெளிவாக இருக்கிறது. எந்த நிலையிலும் மத்திய அரசாங்கம் இசைவு அளித்தாலும், மாநில அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் எந்த இடத்திலும் ஆய்வும் செய்ய முடியாது, உற்பத்தியும் செய்ய முடியாது என்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதை தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஆகவே, மக்களை பீதியடையச் செய்ய வேண்டாம். வதந்திகளை நம்பாதீர்கள். நீங்கள், மக்களை பீதி அடைய வைக்காதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தயவு செய்து மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன், ஏதோ ஓர் இயந்திரம் வந்ததாகவும், ஆழ்துளை போடப் போவதாகவும், ஏதோ நீங்களே கற்பனை செய்து கொண்டு, மக்களை பீதியடைய வைக்காதீர்கள். நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

மத்திய அரசாங்கம் மூன்று தொகுப்புகளை ஏலமிட்டிருக்கிறது. *(1)* ONGC, (2) Vedanta நிலையத்திற்கு, (3) மரக்காணம்–கடலூர்; கடலூர்–நாகப்பட்டினம் பகுதியில், மற்றொன்று இப்போது இரண்டு நாட்களுக்கு முன்பு மீண்டும் ஒரு 3 தொகுப்புகளையும் ONGC–க்கும், IOC–க்கும், Vedanta–க்கும் கொடுத்திருக்கிறது. நீங்கள் சொல்கின்ற பகுதிகளே இல்லை. அதில் ஏலப் பகுதியே வரவில்லை. அப்படியே இருந்தாலும், இதுவரை தமிழகத்தில் ஆயில் நிறுவனங்கள் 2008–லிருந்து இன்றுவரை ஆய்வு செய்வதற்கு 13 விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டதற்கு, இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை. 2015–லிருந்து ஆய்வு செய்து, உற்பத்தி செய்வதற்கு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் 9. இன்றுவரை அரசாங்கம் அதற்கு எவ்வித ஒப்புதலும், இசைவும் வழங்கவில்லை. ஆகவே, இதுவரை அரசாங்கத்திற்கும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் சரி, எங்களுடைய துறை சார்ந்த இயக்குநருக்கும் சரி, அமைச்சர் அலுவலகத்திற்கும் சரி எந்தவித தகவலும் இல்லை. இதுவரை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலையில்தான் இதைப்பற்றி இங்கு தெரிவித்தார்கள். அது என்ன என்பதை விசாரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஒன்றைத் தெளிவாக உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கின்றேன். மீண்டும் ஒரு முறை சொல்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய விவசாய மக்களைப் பாதிக்கின்ற எந்தத் திட்டத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதி அளிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) திரு. முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் திடீரென்று அப்படி ஒன்றும் கேட்க முடியாது. (குறுக்கீடு) அனுமதியில்லை. நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதை என்னிடம் சொன்னால்தான், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் சொல்ல, தயார் செய்ய முடியும். (குறுக்கீடு) அது சரி, உட்காருங்கள், பரவாயில்லை. (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.*

(உ) தமிழகத்தில் உயர் மின் கோபுரங்களுக்குப் பதிலாக புதைவடங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். உயர்மின் கோபுரத்திற்குப் பதிலாக புதைவடம் அமைக்கக் கோரி அரசின் கவனத்தை ஈர்க்கவிரும்புகிறேன். தமிழகத்தில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் 12 உயர் மின்கோபுரங்கள் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகமும்,* Power Grid *நிறுவனமும் செயல்படுத்தி வருகின்றன. இதனால், பாதிக்கப்படும் விவசாயிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக உயர்மின் கோபுரங்களுக்குப் பதிலாக சாலையோரமாக புதைவடமாக அமைக்கக் கோரி அறவழியில் கடுமையாக போராடி வருகின்றனர். இதுபோன்று உயர் மின்னழுத்த மின்சாரம் செல்கின்றபோது, மின்னலைகளால் புற்றுநோய் போன்ற நோய்கள் உருவாகும் என்று* World Cancer Report*–ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால், மனிதர்கள், விலங்குகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. அதேபோன்று, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் எங்கள் கழகத்தின் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித்*